©
தமிழ்நாடு அரசு
2018

# சேலம் மாவட்ட அரசிதழ்

சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

சேலம், ஜூலை 9 - 2018 [எண் 24
[விளம்பி, ஆனி 25 - திருவள்ளுவர் ஆண்டு 2049]

## மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை

*[ந.க. 5491/2018 (அ—1), நாள் 18—06—2018.]*

### சேலம் மாநகராட்சி

### தொழில்வரி அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் : 249, நாள் : 28.12.98, மற்றும் தொழில்வரி திருத்தச்சட்டம் 59/1998, நாள் : 26.12.98–இன்படி சேலம் மாநகராட்சியில் கீழ்க்கண்ட பட்டியலில் கலம் 3–இல் கண்டுள்ளவாறு நு;ணணறிவுத் திறத்தொழில்கள் மற்றும் வணிக தொழில்கள், மரபுத் தொழில்கள் மற்றும் பணித்தொழில்கள் ஆகியவைகளுக்கு 01.10.2013 முதல் தொழில் வரித்தொகை நிர்ணயத்து வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 12.01.1999 –ஆம் தேதிய அரசாணை எண் : 11, பக்கம் எண் : 15, பத்தி எண். 16–இல் ஐந்தாண்டிற்கு ஒரு முறை மன்ற அனுமதியுடன் நடைமுறையிலுள்ள தொழில் வரியினை 25% முதல் 35% வரை கூடுதல் செய்து மாற்றியமைத்து திருத்தம் செய்து கொள்ளத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | அரையாண்டு தோராய வருவாய் | நடைமுறையிலுள்ள அரையாண்டு தொழில் வரி | 30% உயர்வு செய்து மாற்றி அமைக்கப்பட்ட அரையாண்டு தொழில்வரி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ரூ.21,000/– வரை | இல்லை | இல்லை |
| 2. | ரூ.21,001 முதல் ரூ.30,000 வரை | ரூ.131/– | 170/– |
| 3. | ரூ.30,001 முதல் ரூ.45,000 வரை | ரூ.330/– | 429/– |
| 4. | ரூ.45,001 முதல் ரூ.60,000 வரை | ரூ.659/– | 857/– |
| 5. | ரூ.60,001 முதல் ரூ.75,000 வரை | ரூ.989/– | 1250/– |
| 6. | ரூ.75,001 மற்றும் அதற்கு மேல் | ரூ.1250/– | |



Scanned by CamScanner

அரசாணையில் தெரிவித்துள்ளபடி சேலம் மாநகராட்சி மாமன்றம் தனது 31.05.2018–ம் தேதிய தீர்மானம் எண்.87–ல் மேற்காணும் கலம் எண்:3 –ல் கண்ட நடைமுறையிலிருந்து வரும் அரையாண்டு தொழில்வரியில் 30% கூடுதல் செய்து அதிகபட்ச அரையாண்டு தொழில்வரி தொகை ரூ.1250/–என வரையரை செய்தும் கலம் 4–ல் கண்டுள்ளவாறு மாற்றியமைத்து நிர்ணயித்து 1.10.2018 முதல் வசூல் செய்ய அனுமதித்துள்ளது.

எனவே அரசாணைப்படி சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் நுண்ணறிவுத் திறத்தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத்தொழில்கள் மற்றும் பணித் தொழில்கள் ஆகியவைகளுக்கு நடைமுறையிலுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மேற்கண்ட பட்டியலில் கண்ட அரையாண்டு வருமானத்திற்குத் தக்கவாறு நிறுவனம் (Trade) மற்றும் பணியாளர்களுக்கான (Employees) விவர அறிக்கையினை (Return) தயார் செய்து தொழில்வரியினை தொழில்புரியும் அந்தந்த வார்டு அலுவலகங்களில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளத் தெரிவிக்கப்படுகிறது.

மாநகராட்சி எல்லைக்குள் தொழில்புரியும் வணிக பெருமக்கள் மற்றும் இதர தொழில்கள் மேற்கொள்ளுவோர் தாங்களாகவே முன்வந்து மேற்குறிப்பிட்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு தொழில்வரியினை சம்பந்தப்பட்ட வார்டு அலுவலகங்களில் செலுத்தி மாநகராட்சியின் நடைமுறைக்கு சீரிய ஒத்துழைப்பினை நல்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சேலம்,
09.07.2018.

(ஒ,இ.,) X X X ,
ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.

Scanned by CamScanner